பாடம் 1

# வேத பாடத்தின் நன்மைகள்

அநேக வருடங்களுக்கு முன் இராணுவ தலைவன் ஒருவன் தென் பசிபிக் தீவுகளில் ஒன்றில் தன் கப்பலை விட்டு இறங்கினான். இத்தீவின் மக்கள் முன்னால் நரமாமிசத்தை உண்பவர்களாயிருந்தார்கள் என்றும் இப்போது பிறரை நேசிக்கிறவர்களாயும், வேலைகளில் உற்சாகம் உள்ளவர்களாயும் மாறியிருக்கிறார்கள் என்றும் கேள்விப்பட்டிருக்கிறான்.

இராணுவ தலைவன் தீவின் முதல்வரோடு பேசிக்கொண்டிருக்கும்போது அவன் கையில் ஒரு பெரிய வேதாகமம் இருப்பதை கண்டான். இராணுவ தலைவன் சிரித்துக்கொண்டு தீவின்முதல்வனோடு இப்படி பேசினான். ''உண்மையாகவே நீர் அந்த பழைய புத்தகத்தை நம்பவேண்டுவதே இல்லை. அது காலம்கடந்து போனது, ஒருவருக்கும் நன்மை செய்வதும் இல்லை.''

முதல்வர் பக்கத்திலிருந்த இராணுவர்களை சற்று பார்த்து கொண்டு ராணுவ தலைவனின் பக்கமாய் திரும்பி மெதுவாக சொன்னார். ''தலைவரே, இந்த புத்தகத்தினால் உனக்கு நன்மைதான் உண்டு என்று சொல்லலாம். இது உமக்குச் செய்யும் நன்மையை நீர் அறியாமலிருக்கிறீர். இந்த புத்தகம் எங்களுடைய வாழ்க்கையை மாற்றியிருக்காவிட்டால் நீர் இப்போது எங்களுடைய சமையல் பானையில் இருந்திருப்பீர்.''

வேதாகமம் ஒரு மனிதனுக்கு உதவுவதானால் மற்றவர்களுடைய வாழ்க்கையிலும் உதவும். இந்த கதையில் இராணுவ தலைவன் நன்மை அடைந்ததற்கு காரணம் இன்னொருவன் வேதம் அறிந்திருந்ததினால். இந்த பாடத்தின் மூலம் உமக்கு வேதம் எவ்வாறு நன்மை உண்டாக்கும் என்று கற்றுக்கொள்ளலாம்.



இந்த பாடத்தில் நீங்கள் படிப்பவை

ஏன் வேதாகமத்தை படிக்க வேண்டும்?
அதனால் உண்டாகும் நன்மைகள் யாவை?

இந்த பாடம் உங்களுக்கு உதவி செய்யும் விதமாவது:

* ஏன் வேதம் படிக்க வேண்டும் என்பதை விளக்கிக் காட்டும்.
* வேத பாடத்தின் எட்டு நன்மைகளை அறிவிக்கும்.
* ஒழுங்காய் தேவ வசனத்தை படிப்பதின் முக்கியத்துவத்தை உணரச் செய்யும்.

# ஏன் வேதம் படிக்க வேண்டும்

ஏன் வேதம் படிக்கவேண்டும் என்பதற்கு அநேக காரணங்கள் உண்டு. அவைகளில் மூன்றினை பார்ப்போம். 1) இது ஒரு தருணம். 2) இது ஆவிக்குரிய வளர்ச்சிக்கு வழி. 3) நாம் தேவ சித்தத்தை அறிய ஒரு முறை.

## ஒரு தருணம்

**உட்கருத்து 1. ஏன் வேதத்தைப் படிக்கிறோம் என்பதின் காரணங்களை பகுத்தறிய.**

என் நண்பர்களான டோனும், போனியும் விசேஷ கடிதம் ஒன்றை பெற்றுக்கொண்டார்கள். இங்கிலாந்து தேசத்து இளவரசியை சந்தித்து பேச வேண்டும் என்பதே கடிதத்தின் உட்கருத்து. முக்கியமான ஒருவரிடமிருந்து கடிதம் வந்தது ஒரு சிலாக்கியம். இளவரசியை சந்திக்க வாய்ப்பு கிடைப்பது அதிலும் மிகுந்த சிலாக்கியம்.

உங்களுக்கும், எனக்கும் உலக அரசனை விடவும் மேலான ஒருவரிடமிருந்து ஓர் முக்கியமான தனிப்பட்ட கடிதம் வந்திருக்கிறது. அது நம்முடைய தேவன் தாமே அனுப்பியிருக்கிற ஒரு கடிதமாகும். அதை நமக்கு வாசிக்க கிடைத்த ஒரு சிலாக்கியத்தோடு அவரை சந்திக்க ஒரு அழைப்பாயும் கூட இருக்கிறது. அந்த கடிதத்திற்கு தான் வேதாகமம் என்று பெயர். தேவன் நம்மை தம்முடைய பிள்ளைகளாகும்படியாகவும், அவ-ரோடு ஜீவிக்கவும் அழைப்பு கொடுத்திருக்கிறார். அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்வதினால் அவருடைய பிள்ளைகள் ஆகலாம் என்று கூறுகிறார். வேதபாடத்தின் மூலமாய் ஆண்டவரையும், அவருடைய வாக்குத்தத்தங்களையும் கற்றுக் கொள்வது ஒரு ஆச்சரியமான சிலாக்கியம் அல்லவா?

## நீங்கள் செய்ய வேண்டியது

நீங்கள் செய்ய வேண்டியது என்று எழுதியிருக்கிற எந்த பகுதியிலும் இருக்கிற கேள்விகள், பயிற்சிகள் உங்களுக்கு பாடங்களை திருப்பிப்பார்க்கவும் வாழ்க்கையில்கடைபிடிக்கவும் உதவும். நீண்ட விடைகளுக்கு நோட்டு புத்தகத்தை உபயோகியுங்கள். குறிப்புகளை நோட்டு புத்தகத்தில் வையுங்கள்.

1. சொல்லப்படுகின்ற வாக்குமூலத்தோடு சரியாய் முடிக்கிறபதத்திற்கு முன்/ என்ற அடையாளத்தை போடுங்கள். ஒருவன் பெற்றுக் கொள்ளக்கூடிய சிலாக்கியங்களுள் மிகப்பெரிய சிலாக்கியம் யாதெனில்:

... a) தன் தேச தலைவரிடமிருந்து வரும் செய்தி
... b) நல்ல நண்பரிடமிருந்து வரும் செய்தி
... c) தேவனிடமிருந்து வரும் செய்தி

2. கீழ்க்காண்பவைகளுள் எவை வேத பாடம் ஒரு சிலாக்கியம் என்று சொல்லுகிறது? சரியானவிடைக்குமுன்/ என்ற அடையாளம் போடவும்.

... a) தமது பிள்ளைகளுக்கென்று தேவன் அனுப்பும் தனிக்கடிதம்.
... b) தேவன் தம்மைக்குறித்தும் உன்னைக் குறித்தும் சொல்ல விரும்புகிறார்.
... c) உங்களுடைய வேதபாடத்தின் எழுத்தாளன் அவ்வாறு சொல்லுகிறார்.

பாடத்தின் முடிவில் கொடுக்கப்படுகிற விடைகளோடு உங்கள் விடைகளை ஒப்பிட்டு பார்க்கவும்.

வளர்ச்சிக்கு வழி

உட்கருத்து 2 ஒரு விசுவாசி வளருவதற்கு வேதம் எப்படி உதவுகிறது என்னும் வாக்குமூலங்களை தெரிந்தெடுத்தல்.

சாதாரணமாக சுகமான நிலையில் பிள்ளைகள் வளரவேண்டும். இந்த வளர்ச்சிக்கு சரியான உணவு சரியான நேரத்தில் உண்ண வேண்டும்.

தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிற நாம் ஆவிக்குரிய நிலையில் வளர வேண்டும் என்று வேதாகமம்சொல்லுகிறது எபேசியர் 4: 15ல் ''தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும் நாம் வளருகிறவர்களாக இருக்கும்



படி'' என்று எழுதப்பட்டிருக்கிறது. நம்முடைய ஆவிக்குரிய ஆகாரம் வேதாகமம், புசிக்கும் முறையானது அதை படிப்பது.

நாம் படிக்கும்போது, இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவை அதிகம் அறிய முடிகிறது. இந்த அறிவு தான் வளருவதற்கும், உறுதியான கிறிஸ்தவர்களாகுவதற்கும் உதவுகிறது. ''மேலும் நாமனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்கதாக பூரண புருஷராகும் வரைக்கும்.................................
இனி நாம் குழந்தைகளாயிராமல்....... .......
(எபேசியர் 4: 11-14)

## நீங்கள் செய்ய வேண்டியது

3. கீழ்க்கண்ட விடைகளில் சரியான இரண்டு விடைகளை எடுத்து கொடுக்கப்பட்டிருக்கும்

வார்த்தைகளோடு இணைத்து எழுதுங்கள். வேதம் படிப்பதினால் விசுவாசி வளர உதவுகிறது. ஏனென்றால்,

...a) அவன் ஆவிக்குரிய ஆகாரம் பெறுகிறான்.
...b) இயேசு கிறிஸ்துவை அதிகம் அறிகிறான்
...c) அவன் அறிவு சபையில் அவனை முக்கிய மாணவனாக்குகிறது

கீழ்கண்ட வசனங்களை மனப்பாடம் செய்து அவைகள், கர்த்தரரகிய இயேசு கிறிஸ்துவோடு நீ செய்யும் தீர்மானமாக மாற்றவும்.

''கர்த்தாவே நீர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர், உமது பிரமாணங்களை எனக்கு போதியும். உமது கட்டளைகளை தியானித்து உமது வழிகளை கண்ணோக்குகிறேன். உமது பிரமாணங்களில் மன மகிழ்ச்சியாயிருக்கிறேன். உமது வசனத்தை மறவேன்'' *(சங்கீதம் 119.12,15-16)*

## நாம் தேவசித்தத்தை அறிய ஒரு முறை

### உட்கருத்து 3. நம்மை குறித்த தேவசித்தத்தை அறிவதின் முக்கியத்துவத்தை விளக்குதல்

சில வருடங்களுக்கு முன் என் நண்பர் சுகமில்லாமல் இருந்தார். அவருக்கு சரீரத்தில் வியாதி இருந்ததோடு மனக்கவலையும் இருந்தது. அவளை திருமணம் முடிக்க போகிற வாலிபனிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அவளை நேசிக்கிறதாகவும், திருமணம் முடிக்கபோகிறதாகவும் ஆறுதலான கடிதத்தை எழுதியிருந்தார். அவளைக் குறித்து கரிசனையுடைய ஒருவரிடமிருந்து கடிதம் பெற்றுக் கொண்டதும் எவ்வளவோ சீக்கிரத்தில் அவளது வியாதி மாறிவிட்டது.

வேதாகமமும், தேவனுடைய அன்பைக்குறித்து நமக்கு சொல்வதினால், அதுபோன்ற ஒரு கடிதமாகவே காணப்படுகிறது. எப்படி ஜீவிக்க வேண்டும், மறுமையில் அவரோடு எப்படி ஜீவிக்க போகிறோம் என்ற வாக்குத்தத்தங்களையும், அவர் நமக்கு அறிவுரையாக அதில் கொடுக்கிறார்.

நாம் சுகவீனமோ, மனக்கவலையோ அடைந்திருந்தால் தேவனுடைய தனிப்பட்ட செய்தியை படித்து நமக்காக உள்ள தேவதிட்டத்தை அறிவது எவ்வளவு ஆச்சரியம்.

இந்த பாடமானது நம்மை நல்லவர்களாக்கும், நம்மை உற்சாகப்படுத்தும், நாம் தேவனுக்கு முக்கியமானவர்கள் என்பதை கற்பிக்கும்.

வேதம் படிப்பதினால் தேவதிட்டத்தை அறிவதோடு, தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நமது நிகழ்காலத்துக்கும் வருங்காலத்துக்கும் உரியது என்றும் அறிய முடியும். அவருடைய சில வாக்குத்தத்தங்களை அடுத்த பாடத்தில் படிக்கலாம்.

## நீங்கள் செய்ய வேண்டியது

4. கர்த்தருடைய திட்டத்தை நாம் அறியவேண்டுவது மிக முக்கியமானது. ஏனென்றால்,

   a) அதில் அவருடைய வாக்குத்தத்தங்களை நாம் காணலாம்.

   b) நம்பிக்கையும், உற்சாகத்தையும் அளிக்கிறது.
   c) நாம் எவ்வளவு உபயோகமற்றவர்கள் என்பதை காட்டுகிறது.

   d) தேவனுடைய அன்பை நமக்கு வெளிப்படுத்துகிறது.

   e) நம்முடைய வாழ்க்கைக்கு வழிகாட்டியாக இருக்கிறது.

5. உங்களுடைய நோட்டு புத்தகத்தில் சங்கீதம் 119ல் படித்த வசனங்களை எழுதி வையுங்கள். அதை ஒரு ஜெபமாக உபயோகித்து ஆண்டவரை அவருடைய வார்த்தைகளுக்காய் துதியுங்கள்.

# சில நன்மைகள் எவை?

உட்கருத்து 4. வேத பாடத்தினுல் உண்டாகும் எட்டு நன்மைகள்

நன்மை என்றுலே உதவி செய்தல் ஆகும். வேத பாடத்தினுல் கிடைக்கும் அநேக நன்மைகளில் எட்டு நன்மைகளை தெரிந்தெடுப்போம்.

ஆத்துமாவிற்கு ஆகாரம்
சந்தோஷம்
தேவனேடு நெருங்குதல்
உற்சாகம்
அஸ்திபாரம்
ஏவுதல்
சத்தியம்
பாதுகாப்பு

1 ஆத்துமாவிற்கு ஆகாரம்:

வேதமாகிய ஆகாரம் நமது ஆத்துமாவை ஜீவனேடே காக்கிறது. அதனை அனுதினமும் நாம் வாசிப்பதினுல் ஆத்துமாவிற்கும் சரீரத்திற்கும் சுகத்தையும் பெலனையும் அடைகிறேம். இயேசு சொன்னர் ''மனிதன் அப்பத்தினுலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினுலும் பிழைப்பான். (மத்தேயு 4:4)

2 சந்தோஷம்:

வேதம் வாசிப்பதினுல் உண்மை சந்தோஷத்தை நாம் அடைகிறேம். நம்மை நேசிக்கிறவர்களை குறித்த நற்செய்தி நாம் வாசிக்கையில் எவ்வளவு மகிழ்ச்சி அடைவோமோ, அதுபோலவே தேவனுடைய வசனமாகிய நற்செய்தியை நாம் வாசிக்கையில் மகிழ்ச்சி அடையலாம். அவருடைய அறிவுரைகளும் நமது நன்மைக்கென்று நாம் அறிகிறபடியால் அவைகளிலும் நாம் களிகூறுகிறேம். சங்கீதம் 119: 111-ல் ''உம்முடைய சாட்சிகளை நித்திய சுதந்திரமாக்கிக் கொண்டிருக்கிறேன். அவைகளே என் இதயத்தின் மகிழ்ச்சி என்று வாசிக்கிறேம்.

*3 தேவனோடு நெருங்குதல்*

தேவனுடைய வசனங்களை வாசிக்கையில் அவர் நம்மோடு நெருங்கி சேர்வதை உணருகிறோம். அவர் நம்மோடு தனியாக பேசுகிறார். நம்முடைய சிந்தனைக்கும் மேற்பட்ட ஒரு பெரிய நன்மையாய் இது இருக்கிறது.

*4 உற்சாகம்:*

கர்த்தருடைய வசனங்கள் அனைத்தும் நம்மை உற்சாகப்படுத்துகிறதாகவே இருக்கிறது. அவர் நம்மை அன்போடு விசாரிப்பதின் மாதிரிகளும் அதற்கு ஏற்ற வாக்குத்தத்தங்களையும் அவைகளில் காணலாம். மனப்பாடம் செய்ய தகுந்த ஆச்சரியமான வசனம் ஒன்று பேதுருவின் புத்தகத்தில் காணப்படுகிறது. ''அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால் உங்கள் கவலைகளை எல்லாம் அவர் மேல் வைத்து விடுங்கள்.'' *(1பேதுரு 5:7)*

*5 அஸ்திபாரம்:*

அஸ்திபாரத்தின் மேல் தான் கட்டிடம் கட்டுகிறார்கள். நாம் எதை விசுவாசிக்கவேண்டுமென்பதற்கும் எவ்வாறு ஜீவிக்க வேண்டுமென்பதற்கும் தேவனுடைய வசனம் உறுதியான அஸ்திபாரமாய் காணப்படுகிறது என்று இயேசு சொன்னார். வேதத்தை படிக்காதவர்களும் அதை விசுவாசிக்காதவர்களும் அஸ்திபாரம் இல்லாத வீட்டுக்கு ஒப்பாயிருக்கிறார்கள்.

*6 ஏவுதல்:*

தேவன், தமது வசனத்தின் மூலம் நமது இரட்சிப்பிற்கான விசுவாசத்தையும் எதிர்காலத்திற்கான நம்பிக்கையையும் பிறரை நேசிக்கிற அன்பையும் நமக்குள் ஏவுகிறார். ஏவுதல் என்றால் நம்மை நல்லெண்ணங்களுக்கும் நற்கிரியைகளுக்கும் நடத்தும் செயலாகும், அநேக கவிஞர்களும் பாடகர்களும் ஓவியர்களும் வேதாகமத்திலிருந்து ஏவுதல் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் கவிதைகள் பாடல்கள் ஓவியங்கள் இயற்ற வேதாகமத்தின் மூலம் நல் ஆலோசனை பெற்றனர்.

7 சத்தியம்:

வேதாகமத்தில் காணப்படும் சத்தியமானது நமக்குள் எழும்பும் முக்கியமான கேள்விக்கு பதிலளித்து வாழ்க்கையின் பொருளையும் நோக்கத்தை நமக்கு விளக்கி காட்டுகிறது. நமது அறியாமையிலிருந்தும், தவற்றிலிருந்தும் நம்மை விடுதலையாக்குகிறது. ''சத்தியத்தை அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாகும்.''
(யோவோன் 8:32)

8 பாதுகாப்பு:

பாதுகாப்பு என்பது அடைக்கலம் என்பது மட்டுமின்றி பிற்காலத்திற்கான தேவைகளை சந்தித்தல் என்றும் பொருள்படும். தேவனுடைய வசனத்தில் நாம் உண்மை பாதுகாப்பை கண்டடைவதோடு, அது நம்மை அடைக்கலமாகிய கிறிஸ்துவுக்கு நேராகவும், நித்திய வீடாகிய பரலோகத்திற்கு நேராகவும் நம்மை நடத்துகிறது. அதனை நாம் தினமும் வாசிப்போமெனில் அது நமது பட்டயமும் கேடகமுமாயிருக்கும். பாவத்திற்கும், பிசாசுக்கும் விரோதமாய் போராட கூடிய ஆவிக்குரிய ஆயுதமாகவும் காணப்படும்.

## நீங்கள் செய்ய வேண்டியது

6. உங்களுடைய நோட்டு புத்தகத்தில் வேத பாடத்திலுல் வரும் 8 நன்மைகளை பாராமல் எழுதுங்கள். வேதத்தை படிக்கும்போது வேறு நன்மைகளும் உங்கள் எண்ணத்தில் வந்தால் அதையும் சேர்த்து எழுதுங்கள்.

7. இடதுபுறம் காணப்படும் விளக்கத்தோடு எந்த நன்மை பொருந்துமோ, அதன் எண்ணை விளக்கத்திற்கு முன்னுல் குறிப்பிடவும்.

| | | |
|---|---|---|
| ...a) | இது நம்மை பலப்படுத்துகிற ஆகாரம். | 1) பாதுகாப்பு |
| ...b) | தேவன் எப்போதும் நம்மோடிருக்கிறுர். | 2) சத்தியம் |
| ...c) | தேவன் நம்மை விசாரிக்கிறுர். | 3) ஏவுதல் |

| | | | |
|---|---|---|---|
| ...d) | வேதத்தின் நற்செய்தி சந்தோஷத்தை கொண்டு வருகிறது. | 4) | அஸ்திபாரம் |
| ...e) | நமது வாழ்க்கை தேவனுடைய வசனத்தில் கட்டப்படுகிறது. | 5) | உற்சாகம் |
| ...f) | நாம் இம்மைக்கும் மறுமைக்கும் பாதுகாப்பாய்இருக்கிறோம். | 6) | தேவனோடு நெருங்குதல் |
| ...g) | நாம் நல்லெண்ணங்களை பெற்று கிரியை செய்கிறோம். | 7) | சந்தோஷம் |
| ...h) | இது அறியாமையிலிருந்தும் தவறுகளிலிருந்தும் விடுதலை கொண்டுவருகிறது. | 8) | ஆத்தும ஆகாரம் |

## விடைகளை சரிசெய்து பாருங்கள்

உங்கள் பாடத்தின் கேள்விகளுக்கு விடைகள் வரிசையாக கொடுக்கவில்லை. ஏனென்றால் விடைகளை முன்னதாகவே நீங்கள் பார்க்க கூடாது என்பதற்காகதான். கேள்வி எண்ணைவைத்து விடையை சரி பாருங்கள். முதலாவதாகவே பார்க்காமலிருங்கள்.

1 c) தேவன்

5 இந்த வசனங்களை மனப்பாடம் செய்திருப்பீர்களென்று எண்ணுகிறேன். அவைகள் உங்கள் ஜெபமாகவே இருக்கட்டும்.

2 a) தமது பிள்ளைகளுக்கென்று தேவன் அனுப்பும் தனிக்கடிதம்.
b) தேவன் தம்மைக் குறித்தும், உன்னைக் குறித்தும் உள்ளவைகளை சொல்ல விரும்புகிறார்

6 1 ஆத்துமாவுக்கு ஆகாரம்
2 சந்தோஷம்
3 தேவனோடு நெருங்குதல்
4 உற்சாகம்
5 அஸ்திபாரம்
6 ஏவுதல்
7 சத்தியம்
8 பாதுகாப்பு

(பாடத்தில் குறிப்பிட்டுள்ள அன்பு, நம்பிக்கை, ஆவிக்குரிய வளர்ச்சி, நித்திய ஜீவன், போன்ற நன்மைகளை சேர்த்து எழுதலாம்)

3 a) அவன் ஆவிக்குரிய ஆகாரம் பெறுகிறான்.
b) இயேசு கிறிஸ்துவை குறித்து அதிகம் அறிகிறான்

7 a ஆத்துமாவுக்கு ஆகாரம்
b தேவனோடு நெருங்குதல்
c உற்சாகம்
d சந்தோஷம்
e அஸ்திபாரம்
f பாதுகாப்பு
g ஏவுதல்
h சத்தியம்

4 a) அதில் அவருடைய வாக்குத்தத்தங்களை நாம் காணலாம்
b) நம்பிக்கையையும் உற்சாகத்தையும் அளிக்கிறது
b) தேவனுடைய அன்பை நமக்கு வெளிப்படுத்துகிறது
e) நம்முடைய வாழ்க்கைக்கு வழிகாட்டியாக இருக்கிறது.